# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 12.829 – 1961 දෙසැම්බර් 20 වැනි බදාදා – 20.12.1961

12.829 ம் இலக்கம் - 1961 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 20 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

## விலைக் கட்டளைகள்

உணவு விலைக் கட்டளை இலக்கம் டி.கே. 96 — கறுப்புச் சீனியும் வெள்ளைச் சீனியும்

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4 ம் பிரிவினால் பிரதி விலைக் கட்டுப்பாட்டதிகாரிக்கு அளிக்கப்பட்டிருக்கும் தத்துவங்களைக்கொண்டு கண்டி மாவட்டத்திற்கும் நுவரெலியா மாவட்டத்திலுள்ள உடஹேவாஹெட்டப் பிரிவு அதிகாரியின் பகுதிக்கும் பிரதி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு) சிறில் யோசப் சேரசிங்க ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) 1961 ம் ஆண்டு ஜூலை மாதம் 28 ந் திகதி வெளிவந்த இலங்கை அரசாங்க அதிவிசேஷ 12,569 ம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட எனது கே. டி. 93 ம் இலக்க உணவு விலைக் கட்டளையை நிராகரித்துவிடுகிறேன் ;

(2) உடனடியாக இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் 1 ம் அட்டவணையில் 2 ம் பகுதியில் குறிக்கப்பட்டிருக்கும் விலைகள் தான் ஒரு அந்தர் கறுப்புச் சீனியின் ஆகக்கூடிய மொத்த விலையென்றும் அதற்கு மேலதிகமாய் அதே அட்டவணையில் 1 ம் பத்தியில் குறிப்பிட்டிருக்கும் எல்லைக்குள் கறுப்புச சீனி விற்கக்கூடாதென்றும் நியமிக்கின்றேன் ;

(3) உடனடியாக இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் 1 ம் அட்டவணையில் 3 ம் பத்தியில் குறிக்கப்பட்டிருக்கும் விலைகள் அவற்றிற்கு நேரே 1 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள எல்லைக்குள் ஒரு அந்தர் வெள்ளைச் சீனியின் ஆகக்கூடிய மொத்த விலையென்றும், அவற்றிற்கு மேலதிகமாக அவ்விடங்களில் வெள்ளைச் சீனி மொத்தமாக விற்கக்கூடாதென்றும் நியமிக்கிறேன் ;

(4) உடனடியாக இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் 2 ம் அட்டவணையில் 2 ம் பத்தியில் குறிப்பிட்டிருக்கும் விலைகள்தான் அவற்றிற்கு நேரே 1 ம் பத்தியில் குறிப்பிட்ட எல்லைக்குள் ஒரு நிகர இறுத்தல் கறுப்புச் சீனியின் ஆகக்கூடிய சில்லறை விலையென்றும் அதற்கு மேலதிகமாக அவ்விடங்களில் கறுப்புச் சீனி சில்லறையாக விற்கக்கூடாதென்றும் நியமிக்கிறேன் ;

(5) உடனடியாக இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் 2 ம் அட்டவணையில் 3 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள விலைகள்தான் அவற்றிற்கு நேரே 1 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள எல்லைக்குள் ஒரு நிகர இறுத்தல் வெள்ளைச்சீனியின் ஆகக்கூடிய சில்லறை விலையென்றும் அவற்றிற்கு மேலதிகமாக அவ்விடங்களில் வெள்ளைச்சீனி சில்லறையாக விற்கக்கூடாதென்றும் நியமிக்கிறேன் ;

(6) இக்கட்டளையின் நோக்கத்திற்காக—

(அ) எவ்வளவு தொகையானாலும் வெள்ளைச் சீனி அல்லது கறுப்புச் சீனியை திருப்பிவிற்கும் பொருட்டு விற்றல் அல்லது வெள்ளைச் சீனியை அல்லது கறுப்புச் சீனியை ஒரு அந்தர் அல்லது கூடுதலாக விற்றல் மொத்த விற்பனையாகக் கருதப்படும் ;

(ஆ) எவ்வளவு தொகையானாலும் ஒரு அந்தருக்குக் குறைந்த வெள்ளைச் சீனி அல்லது கறுப்புச் சீனியை உணவுக்காக அல்லது பாவிப்புக்காக விற்றல் சில்லறை விற்பனையாகக் கருதப்படும் ;

(இ) எவ்விதமான பனங்கட்டியோ, கருப்பட்டியோ, "சீனியாகக்" கருதப்படமாட்டாது ;

(7) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் நியமிக்கப்பட்டுள்ள இடங்களில் கறுப்புச் சீனியுடன் அல்லது வெள்ளைச் சீனியுடன் வேறெந்தப் பொருளையும் கலந்து ஒருவரும் விற்கக்கூடாதென்று உத்தரவிடுகிறேன் ;

(8) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் நியமிக்கப்பட்டுள்ள இடங்களில் தம் வசத்தில் அல்லது தம் கட்டுப்பாட்டின் கீழுள்ள எவ்விடங்களில் அல்லது வாகனங்களில் வெள்ளைச் சீனி அல்லது கறுப்புச் சீனியை வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும், அவ்விடத்தில் அல்லது வாகனத்தில் தகுந்த ஒரு கொள்கலத்தில் ஒரு அளவு சீனியை நிரப்பி, இக்கட்டளையால் அச்சீனிக்கு விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலையை ஒரு அங்குல உயரத்திற்குக் குறையாத எழுத்துக்களால் ஒரு அட்டையில் அல்லது பலகையில் எழுதி, வாங்குவோர் எவரும் எளிதில் காணக்கூடியவாறு அக்கொள்கலத்தில் இணைத்து பார்வைக்கு வைத்தல் வேண்டுமென உத்தரவிடுகிறேன் ;

(9) இக்கட்டளையின் நோக்கத்திற்காக "இறுத்தல்" அல்லது "இறு" என்பது "அவோர்டுபோஸ்" எடுத்தலளவையின் பிரமாண இறுத்தல் நிறையாகக் கருதப்படுமென உத்தரவிடுகிறேன் ;

(10) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் நியமிக்கப்பட்டுள்ள இடங்களில் கறுப்புச் சீனி அல்லது வெள்ளைச்சீனி மொத்தமாக விற்பனை செய்யும் ஒவ்வொருவரும் சில்லறையாக விற்பனை செய்யும் ஒவ்வொருவரும் வாங்குபவர் கேட்குமிடத்து, பின்வரும் விபரங்களைக்கொண்ட பற்றுச்சீட்டு ஒன்றை கொடுக்க வேண்டும் என்று உத்தரவிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்ற கறுப்பு அல்லது வெள்ளைச் சீனியின் அளவு (நிறை) ;

(இ) விற்ற அளவுக்குக் கொடுபட்ட விலை ;

(ஈ) எவ்விதமான விற்பனை ? மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா ?

(11) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் நியமிக்கப்பட்ட விடங்களில் வெள்ளைச் சீனியை அல்லது கறுப்புச் சீனியை விற்குமிடத்து அதைச் சுற்றிக்கொடுக்கும் உறை அல்லது கொள்கலம் உபயோகப்படின் அதன் விலையும் அடங்குமென உத்தரவிடுகிறேன்.

1961 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 4 ந் திகதி முற்பகல் 9 மணிக்குக் கையொப்பமிடப்பட்டது.

சீ. ஜே. சேரசிங்க,
பிரதி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு), கண்டி மாவட்டமும் நுவரெலியா மாவட்டத்திலுள்ள உடஹேவாஹெட்டப் பிரிவு அதிகாரியின் பகுதியும்.

## முதலாம் அட்டவணை

| பத்தி 1 | வெள்ளைச் சீனியும் கறுப்புச் சீனியும் (மொத்த விற்பனை) | |
|---|---|---|
| | பத்தி 2<br>ஒரு அந்தர் கறுப்புச் சீனியின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலை | பத்தி 3<br>ஒரு அந்தர் வெள்ளைச் சீனியின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலை |
| பகுதி | ரூ. ச. | ரூ. ச. |
| (1) உடு நுவர யடிநுவர பிரிவு அதிகாரியின் பகுதிகளுக்கு .. .. | 61 8 | 68 28 |
| (2) கண்டிப் பட்டணமும் கங்கவிட்டக் கோறளேயும் .. .. | 60 95 | 68 15 |
| (3) பாதஹேவாஹெட்டப் பிரிவு அதிகாரியின் தெல்தோட்டை, பெளளாவே, பட்டியகம உடகம, பட்டியகம பள்ளேகம், பட்டியகம கபடாகம, நவனலிய போபிட்டிய என்னும் கிராமத் தலைமைக்காரர்களின் பகுதிகளைத் தவிர்த்து .. | 61 0 | 68 20 |
| (4) பாதஹேவாஹெட்டப் பிரிவு அதிகாரியின் பகுதியில் தெல்தோட்டை பெளளாவே, பட்டியகம உடகம, பட்டியகம பள்ளேகம, பட்டியகம் கபடாகம, நவனலிய போபிட்டிய ஆகிய கிராமத்தலைமைக் காரரின் பகுதிகளுக்கு .. | 61 70 | 68 20 |
| (5) உடப்பளாத்தைப் பிரிவு அதிகாரியின் பகுதிக்கு .. .. | 61 50 | 68 70 |
| (6) ஹரிஸ்பத்துப் பிரிவு அதிகாரியின் பகுதிக்கு .. .. | 61 10 | 68 30 |
| (7) தும்பனைப் பிரிவு அதிகாரியின் பகுதிக்கு .. .. | 61 40 | 68 60 |
| (8) பாததும்பர பிரிவு அதிகாரியின் பகுதிக்கு .. .. | 61 5 | 68 25 |
| (9) மததும்பரை பிரிவு அதிகாரியின் பகுதிக்கு .. .. | 61 70 | 68 90 |
| (10) உடதும்பரை பிரிவு அதிகாரியின் பகுதியில் கந்தபஹள கோரளையைத் தவிர்த்து மற்றைய இடங்களுக்கு .. .. .. | 62 0 | 69 20 |
| (11) உடதும்பரை பிரிவு அதிகாரியின் பகுதியில் கந்தபஹள கோரளைக்கு .. | 62 20 | 69 50 |
| (12) உடபுளத்கம பிரிவு அதிகாரியின் பகுதியில் நாவலப்பிட்டிய, பள்ளேகம, கடியன்லேன, றம்புக்பிட்டிய, பனித்துடுவ, அம்பகமுவ கிராமத் தலைமைக் காரரின் பகுதிகளுக்கு .. .. .. | 62 0 | 69 20 |
| (13) உடபுளத்கம் பிரிவு அதிகாரியின் பகுதியில் யடியங்குளகா வடக்கு, படியங் குளகா தெற்கு, ஹட்டன், டிக்கோயா, அக்கரைவத்தை கிராமத் தலைமைக் காரரின் பகுதிகளுக்கு .. .. .. | 62 0 | 69 20 |
| (14) உடபுளத்கம பிரிவு அதிகாரியின் பகுதியில் பொகவந்தலாவை, மொறகனேகம, நோர்வூட், மஸ்கெலியா, பொள்பிட்டிய, கடவெல, ஹேமகம, வெலிஹம் பொல, மாபகந்த, கிரிவன்எலியா, தேகித்த, ஹஸ்கரபிட்டிய .. | 63 30 | 70 50 |
| (15) நுவரெலியா மாவட்டத்திலுள்ள உடஹேவாஹெட்டப் பிரிவு அதிகாரியின் பகுதியில் மன்னளுள்ள, முதுனபிட்ட பசார் கிராமத் தலைமைக்காரரின் பகுதியும், கங்கபஹள கோரளேயில் உடகம கிராமத் தலைமைக்காரரின் பகுதியும், தியதிலக கோரளையும் கொஹுக கோரளேயும் கன்னுவ கோரளேயில் அகரிய வாகம கிராமத் தலைவர்களின் பகுதிகளும் .. | 61 70 | 68 90 |
| (16) நுவரெலிய மாவட்டத்தில் உள்ள உடஹேவா ஹெட்டப் பிரிவு அதிகாரியின் பகுதியில் மேலே 15 ம் பந்தியில் சொல்லப்படாத இடங்களுக்கு .. | 62 25 | 69 45 |

## இரண்டாம் அட்டவணை

| பத்தி 1 | வெள்ளைச் சீனியும் கறுப்புச் சீனியும் (சில்லறை விற்பனை) | |
|---|---|---|
| | பத்தி 2<br>ஒரு நிகர இறுத்தல் கறுப்புச் சீனியின் ஆகக்கூடிய சில்லறை விலை | பத்தி 3<br>ஒரு நிகர இறுத்தல் வெள்ளைச் சீனியின் ஆகக்கூடிய சில்லறை விலை |
| பகுதி | ரூ. ச. | ரூ. ச. |
| (1) (அ) கண்டி பட்டணமும் கங்விட்ட கோரளேயும் | 0 57 | 0 64 |
| (ஆ) உடு நுவரையும் யடிநுவரையும் .. | 0 59 | 0 66 |
| (இ) பாதஹேவாகெட்ட .. .. | 0 59 | 0 66 |
| (ஈ) உட பளாத்த .. .. | 0 59 | 0 66 |
| (உ) ஹரிஸ்பத்து .. .. | 0 59 | 0 66 |
| (ஊ) தும்பனே .. .. | 0 59 | 0 66 |
| (எ) பாததும்பரை .. .. | 0 59 | 0 66 |
| (ஏ) மததும்பரை .. .. | 0 59 | 0 66 |
| (ஐ) உடதும்பரையில் கந்தப்பஹள கோரளையைத்தவிர .. .. | 0 59 | 0 66 |
| (2) உடதும்பரை பிரிவு அதிகாரியின் பகுதியில் கந்தபஹள கோறளே .. .. | 0 60 | 0 67 |
| (3) (அ) உட புளத்கம பிரிவு அதிகாரியின் பகுதியில் நாவலப்பிட்டிய, பள்ளேகம, கடியன்லேன், அம்பகமுவா கிராமத் தலைமைக்காரர்களின் பகுதிகள் .. | 0 59 | 0 66 |
| (ஆ) உடபுளத்கம பிரிவு அதிகாரியின் மற்றைய எல்லாப் பகுதிகளுக்கும் .. | 0 60 | 0 67 |
| (4) நுவரெலியா மாவட்டத்திலுள்ள உடஹேவா ஹெட்ட பிரிவு அதிகாரியின் பகுதி .. | 0 59 | 0 66 |

குறிப்பு.—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட கறுப்புச் சீனியை அல்லது வெள்ளைச் சீனியை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல ; இவ்விலைகளுக்கு மேலாக எந்தச் சீனியையும் விற்கலாகாது.

12—1139.

உணவு விலைக் கட்டளை இல. ஜே/36/61. வெள்ளைச் சீனி.

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவை அச்சட்டத்தின் 3 ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்குமிடத்து எனக் களிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு), யாழ்ப்பாண மாவட்டம், கந்தையா சிவப்பிரகாசம் ஆகிய யான் இக்கட்டளையால்—

(1) 1961 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2 ந் திகதி வெளிவந்த 12,568 ம் இலக்க இலங்கை அரசாங்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட யே/29/61 ம் இலக்க விலைக் கட்டளையை உடனடியாக எடுத்துவிடுகிறேன் ;

(2) இதன்கீழ் தரப்படும் அட்டவணையின் 2 ம், 3 ம் பந்திகளில் விபரிக்கப்படும் விலைகளை முறையே வெள்ளைச் சீனியின் மொத்த அந்தரொன்றின் ஆகக்கூடிய மொத்த விலையாகவும், நிகர இருத்தல் ஒன்றின் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும் உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். குறித்த அட்டவணையின் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள எல்லைகளுக்குள் இந்தவிலைகளுக்குக் கூடுதலாக வெள்ளைச் சீனியை விற்கலாகாது என விதிக்கிறேன் ;

(3) இக்கட்டளையின் நோக்கத்துக்காக—

(அ) எத்தொகையான வெள்ளைச் சீனியையும் திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது வெள்ளைச் சீனியை ஒரு மொத்த அந்தரைக் கொண்ட தொகையில் அல்லது அதிற்கூடிய தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படுமென்றும் ;

(ஆ) வெள்ளைச் சீனியை ஒரு மொத்த அந்தருக்குக் குறைந்த எத்தொகையையாவது பாவிப்புக்காக அல்லது உபயோகத்திற்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படுமென்றும் ;

(இ) வெள்ளைச் சீனி எனக் குறிப்பிட்டுள்ளது எல்லாவிதப் பனங்கட்டியும் தவிர்ந்தது எனவும் ஆஞ்ஞையிடுகிறேன் ;

(4) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடைப்பரப்பிலும் வெள்ளைச் சீனியை வேறொரு பொருளோடு கலந்து விற்றலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன் ;

(5) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், வெள்ளைச் சீனியைத் தம் வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அவ் வாகனத்தில் தகுந்த ஒரு கொள்கலத்தில் குறிப்பிட்ட வெள்ளைச் சீனியில் சிறு தொகையையும், இக்கட்டளையால் வெள்ளைச் சீனிக்கு விதிக்கப்பட்ட ஆகக் கூடிய விலைகள் ஒரு அங்குல உயரத்துக்குக் குறையாத எண்களில், விலை அட்டைகளில் அல்லது பலகைகளில் எழுதி, வெள்ளைச் சீனியையும் ஆகக்கூடிய விலையையும் வாங்குபவர் நன்றாகப் பார்க்கக்கூடியவாறு அக்கொள் கலத்தில் இணைத்துப் பகிரங்க மாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(6) இக்கட்டளையின் நோக்கத்துக்காக " இருத்தல் " அல்லது " இரு " என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன் ;

(7) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், வெள்ளைச் சீனியை மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும், வெள்ளைச் சீனியை சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் வெள்ளைச் சீனி வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச்சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்ற வெள்ளைச் சீனியின் தொகையும் வகையும் (நிறையில்) ;

(இ) விற்ற வெள்ளைச் சீனிக்குக் கொடுக்கப்பட்ட விலை ;

(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது சில்லறை விற்பனையா அல்லது மொத்த விற்பனையா என்பது ;

(8) வெள்ளைச் சீனி விற்கப்படுமிடத்து அட்டவணையின் 2 ம், 3 ம் பத்திகளில் குறிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில், அவ்வாறு விற்கப்படும் வெள்ளைச் சீனியைச் சுற்றிக்கொடுக்கப்படும் உறை அல்லது வைத்துக்கொடுக்கும் கொள்கலம் எதாவது உபயோகப் படின் அதன் விலையும் அடங்க வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1961 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 4 ம் திகதி மு.ப. 9 மணிக்கு யாழ்ப்பாணக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

க. சிவப்பிரகாசம்,
உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), யாழ்ப்பாண மாவட்டம்.

### முதலாம் அட்டவணை

| | 1 ம் பந்தி எல்லைகள் | 2 ம் பந்தி மொத்த அந்தர் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய மொத்த விலை ரூ. ச. | 3 ம் பந்தி நிகர றாத்தல் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலை ரூ. ச. |
|---|---|---|---|
| 1. | யாழ்ப்பாணக் காரியாதிகாரியின் எல்லைகள் | 67 80 | 0 65 |
| 2. | வடமராட்சி காரியாதிகாரியின் எல்லைகள் | 68 50 | 0 65 |
| 3. | வலிகாமம் மேற்குக் காரியாதிகாரியின் எல்லைகள் | 69 0 | 0 65 |
| 4. | நெடுந்தீவுக் காரியாதிகாரியின் எல்லைகள் | 69 72 | 0 65 |
| 5. | வலிகாமம் வடக்குக் காரியாதிகாரியின் எல்லைகள் | 68 75 | 0 65 |
| 6. | தென்மராட்சிக் காரியாதிகாரியின் எல்லைகள் | 67 95 | 0 65 |
| 7. | பளைக் காரியாதிகாரியின் எல்லைகள் | 68 35 | 0 65 |
| 8. | கிளிநொச்சி துனுக்காய் காரியாதிகாரியின் எல்லைகள் | 69 44 | 0 65 |
| 9. | வலிகாமம் கிழக்குக் காரியாதிகாரியின் எல்லைகள் | 69 0 | 0 65 |
| 10. | தீவுப் பகுதிக் காரியாதிகாரியின் எல்லைகள் | 68 75 | 0 65 |
| 11. | பூநகரிக் காரியாதிகாரியின் எல்லைகள் | 68 20 | 0 65 |

குறிப்பு.—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருளை விற்க வேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல. இவை ஆகக்கூடிய விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக இப்பொருட்களை விற்கலாகாது.

12—1153

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.